பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 02 2026 12 40
புதன்கிழமை நண்பகல்

**ஆகாஷவாணி செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் நினைவுநாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.
- நாட்டில் 144 ஜிகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு Pralhad Joshi தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் மருத்துவ முதுநிலை பட்டப்படிப்புக்காக 8 ஆயிரத்து 416 கூடுதல் இடங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி அளித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் கூறியுள்ளார்.
- ஆந்திரப் பிரதேச மாநில தலைநகரமாக அமராவதிக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் அளிக்க வேண்டும் என அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- சென்னை சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Nikki Kaliyanda – தாய்லாந்தின் Pruchya Isaro இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்---

பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் நினைவுநாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா சமூக சேவைக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில். அவரது சிந்தனைகள் நாட்டுக்கு வழிகாட்டியாக திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் வளர்ச்சிக்கு பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் வாழ்க்கை வரலாறு ஊக்க சக்தியாக விளங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், சுயசார்பு இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்பட்டவர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா என்று தெரிவித்துள்ளார்.

தீன்தயாள் உபாத்யாயா ஆற்றிய தன்னலமற்ற சேவையும், அவரின் சிந்தனைகளும் என்றும் நிலைத்திருக்கும் என்றும் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

>>><><><><<<

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விஷயங்களை எதிர்க்கட்சித் த்லைவர் திரு ராகுல்காந்தி அரசியல் ஆயுதமாக பயன்படுத்துகிறார் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு திரு ராகுல்காந்தி இதனை அரசியலாக்குவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மக்களவைத் தலைவரை பதவிநீக்கம் செய்யக்கோரி, எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் அளித்தது தேவையற்றது என்று கூறிய அவர், இதுபோன்ற விஷயங்களை எப்படி கையாள வேண்டும் என்று நாடாளுமன்ற விதிமுறைகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களவைத் தலைவர் அலுவலகத்தின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர் நடந்து கொள்வதாகவும் திரு கிரண் ரிஜிஜூ குறைகூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை மரபுகளையும், விதிகளையும் மீறுவது ஆபத்தானது என்றும் அவர் எச்சரித்தார்.

மக்களவையின் கண்ணியத்தை காக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு உண்டு என்பதை திரு ராகுல்காந்தி புரிந்து கொள்ள வேண்டும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

>>><><><><<<

மத்திய பட்ஜெட் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டு இருப்பதாக வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

*அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களில் இந்த பட்ஜெட் பெரிய மாற்றங்களை கொண்டு வரும் என்று கூறினார்.*

*அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டுக்காக இதில் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*அஸ்ஸாம் மாநிலத்தில் அரிய தாதுக்களை வெட்டி எடுப்பதற்கான நெடும்பாதை திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்தும் என்றும் அவர் கூறினார்.*

*வடகிழக்கு மாநிலங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் வளர்ச்சி மையமாக கருதி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இம்மாநிலங்களில் உள்ள கிராமங்கள், ஏழை எளிய மக்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்துத் தரப்பினரின் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.*

*>>><><><><<<*

*மொத்த உள்நாட்டு சூரிய மின்சக்தி உற்பத்தி 144 ஜிகாவாட் என்ற அளவை எட்டியுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு Pralhad Joshi தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இத்தகவலை தெரிவித்த அமைச்சர், முன்னர் 7 ஜிகாவாட் வரை மட்டுமே சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டு வந்ததாகவும், உற்பத்தி திறனை மேம்படுத்தியதன் மூலம் இந்த உயர் அளவை எட்டியிருப்பதாகவும் கூறினார்.*

*காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின் போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை திட்டங்களுக்கு என 10 ஆண்டுகளில் 856 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 11 ஆண்டுகளில் 1 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாயை இந்த திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ததாகவும் திரு Pralhad Joshi தெரிவித்தார்.*

*>>><><><><<<*

*ஆந்திரப் பிரதேச மாநில தலைநகரமாக அமராவதிக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் அளிக்க வேண்டும் என அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு வலியுறுத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவை சந்தித்து பேசிய அவர் இதனை கேட்டுக்கொண்டுள்ளார்.*

*பின்னர், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை சந்தித்து பேசிய அவர், ராயலசீமா பகுதியை தோட்டக்கலை மையமாக மாற்ற நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.*

*மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகானையும் சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட அவர், தென்னை விவசாய மேம்பாட்டுக்காக 200 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*திரு சந்திரபாபு நாயுடு, நாடாளுமன்ற வளாகத்தில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனையும் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.*

*>>><><><><<<*

*நாடுமுழுவதும் மருத்துவ முதுநிலை பட்டப்படிப்புக்காக 8 ஆயிரத்து 416 கூடுதல் இடங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி அளித்துள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர் தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 79 இடங்களும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 826 இடங்களும் அதிகமாக ஒதுக்கீடு செய்துள்ளதாக கூறியுள்ளார்.*

*>>><><><><<<*

*தமிழகத்தில் விவசாய குடும்பத்தின் கடன் நிலுவைத் தொகை சராசரியாக ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 553 ரூபாயாக உள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில், நாட்டில் உள்ள விவசாய குடும்பத்தின் கடன் நிலுவைத் தொகை சராசரியாக 74 ஆயிரத்து 121 ரூபாயாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.*

*கிசான் கடன் அட்டையின்கீழ் 10 லட்சம் கோடி ரூபாய் நிலுவையில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*>>><><><><<<*

*அறிவியலில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பங்கு குறித்த சர்வதேச தினத்தையொட்டி, ஐநா இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.*

*இந்த ஆண்டுக்கான கருப்பொருள் செயற்கை நுண்ணறிவு, சமூக அறிவியல், நிதிக் கட்டமைப்பு மற்றும் நாடுகளின் வளர்ச்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகளை ஈடுபடுத்துதல் என்பதாகும்.*

*அறிவியல் தொழில்நுட்ப உலகில் பெண்கள் இன்று முக்கிய பங்காற்றி வருகின்றனர்.*

*விண்வெளித் துறையிலும், சர்வதேச அளவில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது.*

*பாதுகாப்புத் துறை, புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றிலும் அவர்கள் பேறுபெற்று விளங்குகின்றனர்.*

*விண்வெளித்துறையில் பெண் குழந்தைகளுக்கும் கல்வி அளித்து அவர்களது படைப்புகளுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சியாளர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் கூறியுள்ளார்.*

*(சவுண்ட் பைட் – ஸ்ரீமதி – 35 செகண்ட்ஸ்)*

*>>><><><><<<*

*தமிழகத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 85 லட்சத்து 51 ஆயிரம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஒரு கோடியே 21 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.*

*>>><><><><<<*

விளையாட்டுச் செய்திகள்

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Nikki Kaliyanda – தாய்லாந்தின் Pruchya Isaro இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் இந்தியாவின் சாய் கார்த்திக் – திக் விஜய் பிரதாப் சிங் இணையை வென்றது.

>>><><><><<<

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா முதல் ஆட்டத்தில் இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு மணி 7.30- க்கு தொடங்குகிறது.

>>><><><><<<